# 15 பாரம்பரிய மொழி கற்பித்தலின் வினைத்திறன்கள் பற்றிய ஆய்வுகள் - ஆய்வின் நிலை, ஆய்வுச் சிக்கல்கள், ஆய்வின் தேவைப்பாடு

## 15A பின்னணிகள்

ஹன்ஸ் எச். றைஹ்

### 1. பிரதான கேள்வி

பாரம்பரிய மொழிக்கல்வியின் பயன்பாடுபற்றிப் பொதுவாக ஆர்வம் மற்றும் கவர்ச்சி காரணமாக கேள்வி எழுப்பப் படுவதில்லை. மாறாக அதனுள் உள்ள கேள்வி இவ் வகைக்கல்வி மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியது என்பதை ஏற்கனவே கருதுகின்றது. பள்ளி முறைமையினுள் அதனை நியாயப்படுத்தலுக்கு துணையான மற்றும் எதிரான சொல்லாடல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே தன்-நாட்டு மொழிக் கல்வி பற்றிய ஆய்வு, நெறிமுறை, கற்பித்தல் மற்றும் கற்றல் கருவிகள் அல்லது பள்ளியினுள் ஒழுங்கமைப்புச் சிக்கல்கள் பற்றியோ, கற்றல் செயற்பாட்டிலும் அதன் வெற்றியிலும் மொழிக்கட்டமைப்பு மற்றும் பல்வேறு தன்-நாட்டு மொழிகளின் மொழி-சமூகப் பண்புகளின் தாக்கம் பற்றியோ பெருமளவு இல்லை. ஆனால் பாரம்பரிய மொழிக்கல்வியில் பங்கேற்பு புலம்பெயர் நாடுகள் கற்றல் வெற்றிக்கு ஏதாவது பங்களிப்புச் செய்கிறதா இல்லையா, அல்லது அதைக் தடுக்கிறதா என்பது பற்றியதாகும்.

இக் கேள்வியினை எவ்வாறு விளங்கிக்கொள்ளவேண்டும் என்பது மிக நெருங்கிய முறையில் ஆராயப்பட வேண்டும். கல்வி முறைமையினுள் செயல்திறனாக்கப்பட்ட சேவைகள் மதிக்கப்படுகின்றனவா, அவ்வாறு மதிக்கப்பட்டால் ஏனைய தனிப்பட்ட பாடங்களிலான செயல்திறனைப் போன்று பள்ளியின் ஒட்டுமொத்த வெற்றியினதும் பகுதியாக அமைகின்றனவா; என்றவாறு கேள்விகள் கட்டமைக்கப் படலாம். எவ்வாறு இருப்பினும் கேள்வி அவ்வாறான முறைமையில் அமைவது அரிதாகும். பாரம்பரிய மொழிக் கல்வியானது அனைத்துப் பாடத்திட்ட பாடங்களுக்கும் பொருந்தக்கூடிய மொழி விழிப்புணர்வை மேம்படுத்துவ தனாலும், பண்பாடுகளுக்கு இடையிலான தேர்ச்சி நிலையை அல்லது சுயகற்கைக்கான இயலுமையை வலுப்படுத்து வதுமான கல்வி முறைமையில் முதன்மையான நோக்குகளை அடைவதனையும் குறிக்கும் பாங்கில் அதன் பொருள் விளக்கப்படலாம். இத்தகைய விளைவுகள் அறிவியல் ஆய்வுக்கு இன்னும் உட்படுத்தப்படவில்லை. ஏனெனில் கேள்வி பெரும்பாலும் பாரம்பரிய மொழிக்கல்வியானது அதன் தற்போதைய நிலையில் குடிவரவு நாட்டின் பள்ளி அமைப்பினுள் மாணவர்களின் ஒருங்கிணைப்பை முன்னேற்றுகிறதா அல்லது சமரசம் செய்கிறதா, அல்லது தன்-நாட்டு மொழியைக் கற்றல் பள்ளி மொழியை மற்றும் குடிபெயர்வு நாட்டின் கல்வி மொழியை ஆதரிக்கின்றனவா அல்லது தடை செய்கின்றதா.

இது ஓர் இயல்புநிலை அற்ற கேள்வியாக உள்ளது. ஏனெனில் பொதுவாக பௌதிகவியல் கற்கை கணிதவியல் கற்கைக்கு பங்களிக்கிறது, அல்லது பிரெஞ்ச் பாடங்கள் மாணவர்களின் ஆங்கில செயற்றிறனை மேம்படுத்தல் என்பவை கேள்விக்கு உட்படுத்தப்படுவதில்லை

எவ்வாறு இருப்பினும், பாரம்பரிய மொழிக் கல்வி தொடர்பாக இவ்வாறான கேள்விகள் தொடுக்கப்பட்டுள்ளன, அவை கணிசமான அளவு ஆர்வத்தினையும் ஈர்க்கின்றன. இச் சிக்கல் தொடர்பாக ஈடுபாடுள்ள ஆசிரியக்கலை மற்றும் அரசியல் உள்நோக்கமுள்ள கருத்துகளுக்கும் கூற்றுகளுக்கும் குறைவில்லை. என்னும், பின்வருவது அறிவியல் தராதரங்களை உடைய வெளியீடுகளை மட்டுமே வழங்குகிறது.

### 2. அமெரிக்காவில் ஆய்வு

பாரம்பரிய மொழிக் கல்வி பற்றிய ஓர் உயர் விமரிசன பார்வையை ஹொப்(2005 2011) மேற்கொண்டுள்ளார். இவர் 1970 களின் யு.எஸ்.-அமெரிக்கன் ஆய்வுடன் தொடர் புடையவர். இந்த ஆய்வு கல்விச் செயற்பாடுகளில் இடைவினைத் தொழிலுக்காக வகுப்பில் செலவிடப்படும் கற்பித்தல் நேரத்துக்கும் ("செயற்பாட்டில் நேரம்") மாணவர்களின் செயற்றிறனுக்கும் இடையே உள்ள உறவின் தடயத்தைத் தேடுகிறது. அவர் "குடிபெயர் பிள்ளைகள் மொ2 (L2) (= இரண்டாம் அல்லது பள்ளி மொழி, பதிப்பாசிரியர் குறிப்பு) இனைக் கற்கக் கூடிய நேரம் செலவிடின், அதில் உயர் தகைமைகளை அவர்கள் மேம்படுத்துவர். மாறாக, அவர்கள் தங்கள் நேரத்தை – எப்பொழுதுமே வரையறுப்பர்! – L1 ஐக் (= முதலாம், பதிப்பாசிரியர் குறிப்பு) கற்பதில் முதலீடு செய்தால் இயல்பாக ஏனைய முயற்சிகளுக்கு குறைந்த நேரமே இயலுமையாக இருக்கும்" (ஹொப்(2011, பக் 26). இருந்-தபோதிலும், இந்த சொல்லாடல் கேள்விக்குரியதாகின்றது. ஏனெனில் இது முற்றாக உறுதிப்படுத்தக் கூடிய ஒரு பொது கற்பித்தல் கூற்றினை உறுதிப்படுத்த முடியாத பாடங்களுக்கு இடையேயான ஒரு போட்டிக்கு மற்றும் எவ்வித விளக்கமுமின்றி ஜேர்மன் கற்றலுக்குப் போட்டியாக ஏன் பாரம்பரிய மொழிக்கல்வியை மட்டும் கொள்ளவேண்டும் என்பதற்கும் இட்டுச்செல்கிறது. (இறுதியாக, ஆங்கிலம், விளையாட்டு, கலை, கணிதம் மற்றும் ஏனைய பாடங்கள் கூடிய கற்றல் நேரத்தை எடுக்கின்றன) ஹொப்பின் கோட்பாடு மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளது).

ஷோன் (2005) என்பவராலேயே இச் செயற்பாடு முதலில் தொடக்கி வைக்கப்பட்டது. அவர் "இருமொழிக் கல்வியின் வினைத்திறன்" தொடர்பான ஐக்கிய அமெரிக்க ஆய்வுக்கு பின் சென்று மிக அண்மைய ஆய்வு தொடர்பில் விமர்சன மீளாய்வை மேற்கொள்கிறார். அவர் முதன்மையாக இரு முழுமையான பகுப்பாய்வுகளிலேயே முதன்மைப் படுத்துகிறார், தனிப்பட்டவர்களுடைய பெருந் தொகையான ஆய்வுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றின் விளைவுகளைச் சுருக்குதல். அவருடைய முடிவு: "இரு மொழிக்கல்விச் செயற்றிட்டங்கள் இரண்டாம் மொழியின் (L2) பள்ளிச் செயற்றிறனில் எவ்வித எதிர்மறை

விளைவுக்கான சுட்டிக்காட்டிகள் இல்லை. குறிப்பாக கல்வித் தகைமையிலுள்ள செல்வாக்குத் தொடர்பாகவே இது பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதனுடன் தொடர்புடைய இருமொழிக்கல்வி தாய்மொழியிலான கூடிய கற்பித்தல் என்பன பாதிக்காது என அடிப்படைக்கூற்றுக்களில் கூறப்பட்டுள்ளதுடன் <"செயற்பாட்டில் நேரம்"> எடுகோளும் இச்சூழ்நிலையில் மதிப்பிடமுடியாமல் உள்ளது. இருப்பில் இருக்கின்ற வகுப்பறை மணித்தியாலங்களின் ஒரு பகுதியானது வழமையான பள்ளி மொழியினை விட வேறொரு மொழிக் கற்பித்தலுக்கு வழங்கப்படுமாயின் அது இரண்டாம் மொழியிலும் ஏனைய பாடங்களிலும் தாழ்வான செயல் திறனை நோக்கி தானாகவன்றி வெளிப்படையாகவே இட்டுச்செல்லும். (பக். 64 மேலே குறிப்பிட்டவாறு)

அமெரிக்க ஆய்வாளர்கள் இன்னொன்றில் உடன்பாடு உடையவர்களாயுள்ளனர்: பாரம்பரிய மொழிக் கல்வி குறிப்பிடும்படியாக பிறந்த நாட்டு தகைமை மட்டத்தை அன்றாடத் தொடர்பாடலில் பெற்றுக்கொண்டதை விட மேலே உயர்த்துகிறது. (பார்க்கவும் முன்குறிப்பிட்டது பக் 60)

முதற் பார்வையில் இது சிறுமையாகத் தோன்றினாலும், புலப் பெயர்வில் மொழிநிலைமை மற்றும் பெரும்பாலும் கடினமான கற்பித்தல் நிலைமைகளைக் கருத்தில்கொண்டு அதன் நன்மை சார் தாக்கத்தை உறுதியாக நோக்கவேண்டும்

அமெரிக்க ஆய்வாளர்கள் உடன்படாத இடங்கள் இரண்டாம் கற்றல் பெறுகையில் சாத்தியமான நேர்மறை விளைவுகள் காணப்படுகின்றன. எ.டு. இது தொடர்பாக ஆங்கிலம். மீண்டும் ஒருமுறை ஷோன் என்பவரை மேற்கோள் காட்டுகிறோம்: "இரு மொழி நிகழ்ச்சித்திட்டம் அல்லது பாரம்பரிய மொழிக்கல்வி நடுநிலையாக மட்டுமன்றி L2 தகைமையிலும் L2இல் பாடசாலைத் தகைமையிலும் நேர்மறை விளைவைக்கொண்டுள்ளது என்னும் எடுகோளுக்கு, தற்போதைய ஆய்வின் நிலையானது தெளிவான நம்பகமான சான்றுகள் எதனையும் கொண்டிராது உள்ளது. கற்பித்தல் மாதிரி மற்றும் ஏனைய சூழல்சார் பண்புகளையொட்டியே விளைவு நடுநிலை மற்றும் பகுதியாக, குறிப்பிடும்படியான நேர்மறை என்பனவாக வேறுபடுகின்றன" (மேற்குறித்தவாறு, பக் 64, Esser 2006 இனையும் பார்க்க, பக். 387-398). மேலும், அமெரிக்காவில் அடுத்தடுத்த ஆண்டுகளில் வெளிவந்த ஆய்வுகளில் விவாதங்களை முடிவுக்கு கொண்டுவர முடியவில்லை. மிக அண்மையிலான கண்ணோட்டம் (Grooms 2011) உறுதியுடன் முடிவடைகிறது: ஆய்வின் பெரும்பாலான பகுதி இரு மொழிக்கல்விச் செயற்றிட்டங்கள் ஆங்கிலத்தை மட்டும் வழங்குவதனை விட உயர்வானவை என்ற ஊகத்திற்கு வலுச்சேர்ந்தாலும் இறுதிப்பகுப்பாய்வில், குறிப்பிட்ட ஒரு கற்பித்தல் மாதிரி ஓர் இறுதிச் சான்றாக வழங்கப்படாமையால், கல்விசார் கொள்கை மற்றும் கற்பித்தல் பயிற்சிகளில் கருத்தாடல்களுக்கும் வேறுபட்ட முடிவுகளுக்குமான இடைவெளியினை வழங்குகின்றது" (ப.147 இல் மேற்குறித்தவாறு).

அமெரிக்காவின் பல் வகை மாதிரிகளுள் பல ஆய்வுகள் மற்றும் ஒப்பீட்டுச் சிக்கல்கள் ஆகியவற்றின் ஆய்வுநெறி முறைகளின் வலுவற்றதன்மை பெரும் சிக்கலென்பதுடன் அது திட்டவட்டமான முடிவினை எடுக்கத் தடுக்கின்றது. ஜேர்மன் பேசுவோர் கல்வி அமைப்புகள் தொடர்பாக, அமெரிக்காவின் "இருமொழியக் கல்வி" ஜேர்மனி, ஒஸ்ரியா, சுவிற்சர்லாந்து பாரம்பரிய மொழிக் கல்வி மாதிரிகளுடன் நேரடியாக ஒப்பிடமுடியாது. அவை பல அமெரிக்க மாதிரிகளின் சிறிய பகுதியுடன் ஒத்திருப்பை பெரும்பாலும் கொண்டிருக்கலாம். இறுதியாக அவை ஏனைய கல்விக்கொள்கைச் சூழலினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

## 3. ஜேர்மன்மொழி பேசும் பகுதிகளில் ஆய்வு

ஜேர்மன்மொழி பேசும் பகுதிகளில் பொருத்தமான அறிவியல் ஆய்வுகள் அரிதாயுள்ளன, மற்றும் அவற்றின் வரம்பு வரையறுக்கப்பட்டுள்ளன. அவர்களின் சிறிய மாதிரி அளவையை அமெரிக்கப் பரிமாணங்களுடன் ஒப்பிட முடியாது.

2005 / 06 ஆம் ஆண்டுகளில் சூரிச் மாநிலத்தில் நடாத்தப்பட்ட ஓர் ஆய்வு பா.மொ.க வுக்குச் சென்ற 51 அல்பானியன் - பேசும் மாணவர்களையும் (தரம் 4-6) 29 துருக்கிஷ் - பேசும் மாணவர்களையும் பா.மொ.க வுக்குச் செல்லாத 46 மாணவர்களையும் உள்ளடக்கியிருந்தது. அல்பானியன், துர்கிஷ், மற்றும் ஜேர்மன் போன்ற மொழிகளில் முறையாக ஒரு வருடத்திலான கற்றல் வளர்ச்சியும் செயற்றிறன் மட்டத்தில் பாரம்பரிய மொழிக் கல்வியின் தாக்கத்தினையும் அறிந்து கொள்வது இதன் நோக்காக இருந்தது (Caprez – Krompak 2010, இயல் 15Bயில் விரிவாக தரப்பட்டுள்ளது). இது இரு மொழிகளிலும் எழுத்துத் தேர்வுகளின்(-தேர்வுகள்) முடிவுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அல்பானியன் மொழியில் பா.மொ.க வுக்கு வருகைதரும் மாணவர்கள் உச்ச அளவிலான செயற்றிறன் நியமத்தை அடைந்ததுடன் பா.மொ.க வுக்கு வருகை தராத மாணவர்களை விட விரைவாக கற்றல்சார் முன்னேற்றத்தைக் கொண்டிருந்ததாகவும், வேறுபாடானது புள்ளி விபரவியலில் சிறப்பானதென்பதும் தெளிவாகக் கூறப்படமுடியும். துருக்கிஷ் மொழியின் பெறுபேறுகளும் அதற்கு முரணாகாத போதும் புள்ளிவிபரப்படி வலுவற்ற தன்மையுடையன, மாதிரி சூழ்நிலைகளின் அடிப்படையில் திட்டவட்டமான முடிவுகளைச் செய்வதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஜேர்மன் தொடர்பாக, அல்பானியன் பேசும் மாணவர்களின் கற்றல் முன்னேற்றமானது ஜேர்மனில் முன்பு பெற்ற தேர்ச்சி நிலையில் மட்டுமே தங்கியுள்ளது என்பது தெளிவானதாகும். இது தொடர்பாக தாய் மொழிக்கல்வியில் பங்குபற்றல் வேறு எவ்வித பங்கினையும் கொண்டதாயில்லை. (துருக்கிஷ் மொழி பேசும் மாணவர்கள் தொடர்பாக, ஜேர்மனியில் அவர்களது அபிவிருத்தி தொடர்பிலான பகுப்பாய்வானது மேற்குறிப்பிட்ட குறைவான மாதிரி சிந்தனை காரணமாக தவிர்க்கப்பட்டது.). ஜேர்மன் மொழி பேசும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பெரும் ஆய்வு என்பதனால் அமெரிக்காவில் தற்போதைய கலந்துரையாடல்களின் மையப்படுத்தலுக்கு மிகவும் ஒப்பான பெறுபேற்றை முடிவில் கொண்டுள்ளது.

2006 – 2008 ஆம் வருடங்களில் சூரிச் நகரின் (Moser, etal 2010) மழலையர் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட 181 மாணவர்களின் கற்றல் முன்னேற்றம் தொடர்பிலான ஆய்வானது இரண்டு ஆண்டுகளில் அவர்களது தாய் மொழியில் முறைமையான தூண்டுதலைப் பெற்றுள்ளதுடன் 118 மாணவர்கள் ஜேர்மன் மொழியில் அவர்களுக்கே உரியதாகக் கற்பிக்கப்பட்டுள்ளனர் என்பதனை ஒப்பிட்டு நோக்கியது. அல்பானியன், பொஸ்னியன் / குரோசியன / சேர்பியன், போர்த்துக்கீஸ், ஸ்பானிஷ் மற்றும் தமிழ் போன்றன முதல் மொழிகளாகக் காணப்பட்டன. ஆய்வானது ஒலியியல் சார் விழிப்புணர்வு, சொற்களஞ்சியம், மற்றும் அவர்களது தாய் மொழியிலும் இரண்டாம் மொழியிலும் (ஜேர்மன்) தொடக்கப் படிப்பின் எழுத்தியல்சார் பண்புகளின் அறிவின் அமைவான கற்றல் முன்னேற்றத் தினை மையப்படுத்தியது. உறுதிப்படுத்தும் பங்கு கொண்டிராத முதல் மொழியின் முன்னேற்றம் நிகழ்ந்ததா இல்லையா எனும் கேள்வியைக் கேட்கமுன்னர் பெறப்பட்ட அறிவு மட்டத்தின் வாயிலாக இரண்டு மொழிகளிலும் முன்னேற்றம் மிகவும் உறுதியாக உறுதிப்படுத்தப்பட்டது என்பது தெளிவாக வெளிவந்தது. எழுத்தியல் சார் பண்புகள் மற்றும் முதல் படிப்புகளின் அறிவிற்கு அமைய முதல் மொழியில் பெறப்பட்ட தேர்ச்சியானது ஜேர்மன் மொழி தேர்ச்சியில் மிகவும் உறுதியான அழுத்தத்தை

கொண்டிருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டது. இந்த ஆய்வும் தாய்மொழிக் கல்விக்குச் சிறிய வகிபாகத்தையே குறிக்கின்றது. சிறுவர்களின் மொழியியல் நிலைமையின் வெளிச்சத்தில், அளவு மற்றும் தரத்திலான கற்பித்தல் விளைவின் பரிமாற்ற விளைவு போதியதாக கருதப்பட முடியுமா என்பதனை ஆசிரியர்கள் சிறந்த கேள்விகளை திறந்த நிலையிலேயே விட்டுச்செல்கின்றனர்.

## 4. ஒரு பரந்த கேள்வி: இரு மொழியம் மற்றும் பாடசாலையின் வெற்றி

பாரம்பரிய மொழிக்கல்வியின் செயற்றிறனுக்கு வரும்போது நேரடியான கற்பித்தல்களுடன் தொடர்புபடாத பாடசாலையின் வெற்றி மற்றும் இரு மொழியம் என்பவற்றுக்கு இடையிலான தொடர்பு பற்றி வெளியீடுகள் குறிப்பிடப்பட்டவை பொதுவான கேள்விகளைக் கொண்டுள்ளன. இவ்வாறான கேள்விகள் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ள போதிலும் இந்தக் கருத்தாடலைச் சிறப்பாக ஏற்றுக்கொள்வது பொருத்தமானது எனக் காட்டுகின்றது.

எஸ்ஸரின் இந்த விளைவுக்கான நிலைப்பாடானது சில எண்ணக்கருத்துளை ஈர்த்துள்ளது. (2006). அவர் ஆங்கிலத்தில் படிப்புச் செயற்றிறனில் இருமொழியத்தின் நேர்மறைச் செல்வாக்கைப் பல பெரிய அமெரிக்க ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். எவ்வாறு இருப்பினும், குறித்த தாய் மொழிப் பண்பானது உறுதிப் படுத்தும் காரணி என்றும் உண்மையில் அதன் விளைவு சிறிய அளவு என்பதை மீள் கணிப்பின் ஊடாக காட்ட முடியும் எனவும் எஸ்ஸர் சந்தேகிக்கின்றார். பாடசாலையின் அடைவுக்கு அதனுடன் தொடர்புடைய ஆங்கில அறிவு மாத்திரம் போதுமானது எனவும் தாய் மொழியின் அறிவு அவசியமற்றது என அவர் நிறைவு செய்கிறார். (மேலே பக். 371-379 இல் குறிப்பிட்டவாறு).

டொல்மன் / கிரிஸ்டென் (2010) ஆய்வானது ஜேர்மன் பேசப்படும் பகுதிகளுக்கான எஸ்ஸரின் நிலைப்பாடு பற்றிய மீளாய்வாகக் கருதலாம். 2004 – 2006 ஆம் வருடங்களில் கொலோனில் அவர்களது ஆய்வானது மூன்றாம் தரத்தில் கற்கும் 739 துருக்கிஷ் மற்றும் ஜேர்மன் மாணவர்களின் ஜேர்மன் மற்றும் துருக்கிஷ் மொழியில் கொண்டுள்ள அறிவினை எழுத்துத் தேர்வுகளுடாக அளவையிடப் பட்டதுடன் அவற்றினை பொது நுண்ணறிவுத் தேர்வு, படிப்புத் தேர்வு மற்றும் கணிதத் தேர்வு என்பவற்றின் பெறுபேறுகளுடன் ஒப்பிடப்பட்டது. (துருக்கிஷ் மொழியில் சிறப்பான தேர்ச்சி நிலையை அவர்கள் கொண்டிருந்த போதும் இல்லாத போதும்) ஜேர்மன் மொழியில் சிறப்பான தேர்ச்சியினைக் கொண்ட மாணவர்கள் தேர்வில் சிறப்பாக செயற்பட்டுள்ளனர். அது அல்லாவர்கள் (இங்கும், துருக்கிஷ் மொழியில் தேர்ச்சி இருப்பது இல்லாமையைப் பொருட்படுத்தாது) ஜேர்மன் மொழியில் குறைவான தேர்ச்சியுடன் கூடிய மாணவர்கள் தேர்வில் குறிப்பாக மிகவும் குறைவான முறையில் செயற்றிறனை வெளிப் படுத்தியுள்ளனர் என்பதைக் காட்டுகிறது. இருமொழியம் தேர்வுச் செயற்றிறனில் மற்றும் தேர்ச்சியில் அவ்வாறான எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்தாத போதிலும் வெற்றியைத் தீர்மானிக்கின்ற காரணியாக ஜேர்மனிய மொழி உள்ளதுடன் தாய் மொழியின் அறிவானது கூடுதலான வளத்தினைக் குறிப்பதாயில்லை என்று ஆசிரியர்கள் முடிவுக்கு வருகின்றனர்.

இயல்பற்ற ஆனால் நம்பத்தகுந்த இணைப்பு, இயல்பாகக் கருதப்படாததை நாடளாவிய முறையில் நடைபெற்ற ஆய்வானது மதியுரைசெய்துள்ளது. அது ஜேர்மனியில் ஆங்கிலம் மற்றும் ஜேர்மன் மொழித்தேர்ச்சியுடைய ஒன்பதாம் தர மாணவர்களைப் பற்றியது. (DESI- Consortium 2008). தொடர்புடைய வழமைக்கு மாறான நியாயமான தொடர்பினைக்கொண்ட, விடயத்தினை ஆலோசித்துள்ளனர். அது ஜேர்மன் மொழிக்கு மேலதிகமாக இன்னுமொரு மொழியினைப் பேசி வளர்ந்த மாணவர்களின் ஆங்கில மொழித் தேர்ச்சியானது ஜேர்மன் மொழியில் மாத்திரம் தனி மொழியுடன் வளர்ந்த மாணவர்களின் தேர்ச்சியைவிட உயர்ந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. (மேலே ப. 215-219 வரை குறிக்கப்பட்டுள்ளவாறு) இது மேலும் தொடரப்பட வேண்டிய குறிப்பிடத்தக்க தொடர்பாகும். (2006, ப. 379f).

## 5. பா.மொ.க வின் ஆற்றல்களும் வாய்ப்புகளும்

இரண்டாம் மொழியொன்றைக் கற்றல் மற்றும் பள்ளி வெற்றியில் ஏற்படக்கூடிய நேர்மறையான விளைவுகள் தொடர்பான ஆய்வில் தற்போதுள்ள பரந்த உண்மையற்ற நிலை, மேலும் துல்லியமான வேறுபடுத்தும் கேள்விகளுடன் புதிய நெறிமுறைக்குட்பட்ட சரியான ஆய்வுகள் வேண்டப்படுகின்றன.

பாரம்பரிய மொழிக் கல்வியின் உச்ச அளவிலான விமர்சன நோக்கத்தை ஆமோதித்துள்ள எஸ்ஸர் குறிப்பிடுகையில்: "முடிவு ஒன்றினுடையதாயினும், ஆனால் உண்மையில் பொருத்தமான ஆய்வு, அது சிறப்பான ஆனால் வரையறுக்கப்பட்ட நிலைப்பாட்டின் கீழ் இருப்பினும், பொருளுள்ள விளைவின் சான்றாக அமையும். ஆகவே அதனை நீக்க முடியாது [அது தற்போதைய ஆய்வு, H.R.]" எனக் கூறுகிறார் (எஸ்ஸர் 2006, ப. 398). ஆய்வில் பல நிலைப்பாடுகள் வரையறுக்கப்படுகின்றன, அவை கருத்தில் கொள்ளப்படவேண்டியன: அமைப்பும் கற்பித்தல் தரமும், வேறுபட்ட மொழிப் பெருமை, மொழிகளின் கட்டமைப்பு இடைவெளி, பள்ளியில் பண்பாட்டுச் சூழல், புலம் பெயர் மக்களின் மொழியியல் தன்-உருவம், முதலியன

இவ்வாறான கட்டுப்பாடுகளில் ஒன்றான, வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடனான பாரம்பரிய மொழிக்கல்வியின் இணைப்பானது 2006 - 2010 ஆண்டுகளில் இருந்து கொலோனில் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வின் பொருளாக அமைந்தது. இது 66 துருக்கிஷ - ஜேர்மனிய பாடசாலை மாணவர்களின் அவர்களது கீழ் மட்ட வகுப்புக்களின் ஊடாக எழுத்து மொழித் திறமையின் மேம்பாட்டைக் கண்டறிந்தது. எவ்வாறு இருப்பினும் மாதிரி சூழ் நிலைகளின் அடிப்படையில் பெறுபேறுகள் உடனடியாக பொதுமைப்படுத்தக்கூடாது. மொழி உயர்வின் மூன்று எண்ணக்கருக்களை ஒப்புநோக்குவதனை இந்த ஆய்வு இலக்காகக் கொண்டுள்ளது: ஒருங்கிணைக்கப்பட்ட நெடுங்கணக்கு, தாய் மொழியின் துணைக்கற்பித்தலுடன் கூடிய ஜேர்மன் மொழி வளர்ச்சி, மற்றும் தாய் மொழிக் கூறுகள் இன்றி ஜேர்மன் மொழி ஊக்குவிப்பு. ஒருங்கிணைக்கப்பட்ட நெடுங்கணக்கு எண்ணக்கருவானது படித்தல் மற்றும் எழுதுதல் கற்கையினை மாத்திரம் உள்ளடக்கியதல்ல, மாறாக வகுப்பறையில் இரண்டு பயிற்றுவிப்பாளர்களதும் ஒரே நேர முன்னிலையுடனான முழுக்கற்பித்தல் மணித்தியாலங்கள் உட்பட ஜேர்மன் மற்றும் துருக்கிஷ் மொழியிலான வகுப்பறை அறிவுறுத்தலு-க்கு இடையிலான உள்ளடக்கம் மற்றும் முறைமையின் அடிப்படையிலான விரிவான சீரமைப்பினையும் கொண்டுள்ளது. குறிப்பாக எழுத்துத் தேர்வுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட உயர்வுடன் கூடிய குழுவானது இரண்டாம் வருடத்தில் ஏனைய இரண்டு குழுக்களை விட துருக்கிஷ் மொழியில் உச்ச அளவிலான செயற்றிறன் முன்வைப்பினை அடைந்தது குறிப்பிடத்தக்க விளைவுகளாகும். ஜேர்மன் மொழியில் குறிப்பிடத்தக்க அவ்வாறான விளைவுகள் மூன்று ஆண்டுகளில் வளர்ச்சி

கண்டாலும் நான்காம் ஆண்டில் தெளிவாக வெளிக்காட்டப்பட்டது. அனைத்திலும் பார்க்க எழுத்துரு நீளமும் வெவ்வேறு வகையிலான சொற்கோவைகளும் அடிப்படையில் சிறப்பான ஒருங்கிணைக்கப்பட்ட வகுப்புக்களில் மாணவர்கள் சிறந்த செயற்றிறனாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள இவை வழிவகுத்துள்ளது.

## 6. முடிவு

ஆய்வின் நிலை மனநிறைவு தருவதாக இல்லை. இனி மறுக்கமுடியாத இரண்டு முடிவுகள் இருக்கின்றன: (1) பாரம்பரிய மொழிக்கல்வி தாய்மொழியை முன்னேற்றி வருகின்றது. (2) ஜேர்மன் மொழிக் கற்பித்தலின் இது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இதன் விளைவாக வெளிப்படையான நிச்சயமற்ற ஒரு நிலைமை, அது ஆசிரியவியல் நடவடிக்கையின் நோக்கு நிலைக்கு அல்ல. (3) ஜேர்மன் மொழியைக் கற்றல் பிற கல்வி சாதனைகள் ஆகியவற்றில் பாரம்பரிய மொழிக்கல்வியின் ஐயத்துக்கு இடமின்றி நன்மை பயக்கும் முன்னேற்ற விளைவை எண்பிக்க (நிரூபிக்க) முடியாது.

கையிலுள்ள பணி எதிர் காலத்தில் கூடிய வேறுபட்ட எண்ணக்கருவின் நிறைநெறி விளைவுகள் மற்றும் அவை இடம்பெறும் இடங்கள் பற்றிய ஆய்வு அணுகுமுறையைக் கண்டுபிடிப்பதாகும். இங்கு, எண்ணற்ற மொழியியல் மற்றும் பண்பாட்டு தகைமைகள் அத்துடன் சமூக, நிறுவன, மற்றும் தனிப்பட்ட நிலைப்பாடுகளும் செயற்பாட்டுக்கு வருகின்றன.

தற்போதுள்ள சில ஆய்வகளால் மொழிகள் கற்றல் திறன் மற்றும் பிற மொழிகளால் கற்றுக்கொள்ளக்கூடிய திறன் ஆகியவை பயனுள்ள ஆராய்ச்சி நோக்குகளாக இருக்கலாம். ஆனால் பள்ளியின் "இயல்பான நடவடிக்கை"க்கும் பாரம்பரிய மொழிக்கல்விக்குமான அண்மைநிலை அல்லது, மாறாக, இடைவெளி ஒரு செல்வாக்கு செலுத்தும் குறிப்பிடத்தக்க காரணி என கருதப்படுகிறது.

## நூற்பட்டியல்


Caprez-Krompàk, Edina (2010): Entwicklung der Erst- und Zweitsprache im interkulturellen Kontext. Eine empirische Untersuchung über den Einfluss des Unterrichts in heimatlicher Sprache und Kultur (HSK) auf die Sprachentwicklung. Münster u. a.: Waxmann.

DESI-Konsortium (Hrsg.) (2008): Unterricht und Kompetenzerwerb in Deutsch und Englisch. Ergebnisse der DESI-Studie. Weinheim und Basel: Beltz.

Dollmann, Jörg; Cornelia Kristen (2010): Herkunftssprache als Ressource für den Schulerfolg? Das Beispiel türkischer Grundschulkinder. Zeitschrift für Pädagogik, 56, 55. Beiheft, S. 123–146.

Esser, Hartmut (2006): Sprache und Integration. Die sozialen Bedingungen und Folgen des Spracherwerbs von Migranten. Frankfurt/New York: Campus.

Grooms, Andrea Morris (2011): Bilingual Education in the United States. An Analysis of the Convergence of Policy, Theory and Research, Diss., Pittsburgh: University of Pittsburgh.

Hopf, Diether (2005): Zweisprachigkeit und Schulleistung bei Migrantenkindern: Zeitschrift für Pädagogik, 51 (2), S. 236–251.

Hopf, Diether (2011): Schulleistungen mehrsprachiger Kinder: Zum Stand der Forschung. In: Sabine Hornberg; Renate Valtin (Hrsg.): Mehrsprachigkeit. Chance oder Hürde beim Schriftspracherwerb? Empirische Befunde und Beispiele guter Praxis. Berlin: Deutsche Gesellschaft für Lesen und Schreiben, S. 12–31.

Moser, Urs; Nicole Bayer; Verena Tunger (2010): Erstsprachförderung bei Migrantenkindern in Kindergärten. Wirkungen auf phonologische Bewusstheit, Wortschatz sowie Buchstabenkenntnis und erstes Lesen in der Erst- und Zweitsprache. Zeitschrift für Erziehungswissenschaft, 13, S. 631–648.

Reich, Hans H. (2011): Schriftsprachliche Fähigkeiten türkisch-deutscher Grundschülerinnen und Grundschüler in Köln. Ein Untersuchungsbericht. Köln: Bezirksregierung.

Reich, Hans H. (2016): Deutschförderung, Muttersprachlicher Ergänzungsunterricht, Koordinierte Alphabetisierung – Auswirkungen unterschiedlicher Sprachförderkonzepte auf die Fähigkeiten des Schreibens in zwei Sprachen. Eine Untersuchung mit türkisch-deutschen Grundschülern und Grundschülerinnen in Köln. In: Peter Rosenberg; Christoph Schroeder (Hrsg.): Mehrsprachigkeit als Ressource. Berlin: de Gruyter (erscheint voraussichtlich im Sommer 2016).

Söhn, Janina (2005): Zweisprachiger Schulunterricht für Migrantenkinder. Ergebnisse der Evaluationsforschung zu seinen Auswirkungen auf Zweitspracherwerb und Schulerfolg (= AKI-Forschungsbilanz 2). Berlin: Wissenschaftszentrum für Sozialforschung.